சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் கிராமங்களில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில் (எம்ஐஇ.1)துறை

அரசாணை (நிலை) எண்.244

நாள்: 8.10.2015
மன்மத – புரட்டாசி 21,
திருவள்ளுவர் ஆண்டு –2046

ஆணை:

29.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்பாக கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்து அறிவிப்பு வெளியிட்டார்கள்:

“மாநிலத்தில் உள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், வல்லம்–வடகால் கிராமங்களில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் TIDCO சுமார் 350 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 2 லட்சம் சதுர அடி பரப்பள்வில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை அமைக்கும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையம், தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வானூர்தி உதிரி பாகங்களை வடிவமைக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஏதுவாக அதி வேக கணினி மற்றும் வடிவமைப்பு வசதிகளை கொண்டதாக இருக்கும். இம்மையத்தில் 50-க்கும் மேற்பட்ட வானூர்தி உதிரி பாகங்களை, வடிவமைக்கும் மற்றும் மேம்படுத்தும் நிறுவனங்கள் தங்களது மையங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் TIDCO-வால் அமைக்கப்பட உள்ள சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம், 350 கோடி ரூபாய் முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்”.

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் அமைக்கப்பட உள்ள சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Limited) என்ற சிறப்பு நோக்கு நிறுவனத்தின் மூலம் குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

நகல்:
தொழில் (வசெதி) துறை, சென்னை – 9.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
8.10.15